RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை

அ. ஏஞ்சல் ராணி [அ] *

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, இந்தியா,

# The Literary Talent of Rajam Krishnan

A. Angel Rani [a, *]

[a] Department of Tamil, Sri Kalishwari College (Autonomous), Sivakasi, India

*Corresponding Author:
angelrani21102009@gmail.com

Received: 07-12-2025
Revised: 21-02-2026
Accepted: 05-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is one of the prominent writers in Tamil literature who portrayed social realities with deep humanistic concern. Her literary works reflect various aspects of society such as the lives of women, the struggles of the working class, rural life, and issues of social equality. A significant feature of her authorship is the sensitive portrayal of women's experiences, their psychological struggles, social restrictions, and their journey toward empowerment. Her writings are also known for their simple language, realistic characters, and strong sense of social responsibility. This research article aims to analyze the literary excellence of Rajam Krishnan by examining the themes, narrative style, social perspectives, and feminist ideas reflected in her works.

**Keywords:** Rajam Krishnan, Writing, Tamil Literature, Feminist Thought, Social Perspective, Rural Life, Humanistic Perspective

## முன்னுரை

தமிழ் இலக்கியம் சமூகத்தின் கண்ணாடியாக விளங்குகிறது. அந்தக் கண்ணாடியில் சமூகத்தின் அடித்தளத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையை உண்மையோடு பிரதிபலித்த எழுத்தாளர்களில் ராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர். இலக்கியம் என்பது அழகியல் ரசனைக்காக மட்டுமல்ல் அது சமூக மாற்றத்திற்கான கருவி என்ற தெளிவான சிந்தனையுடன் அவர் எழுதினார். பெண்களின் வாழ்க்கை, உழைப்பாளி மக்களின் துயரம், சமூக அநீதிகள் மற்றும் மனித உறவுகளின் சிக்கல்கள் ஆகியவை அவரது எழுத்தாளுமையின் மையமாக அமைந்துள்ளன. ராஜம் கிருஷ்ணன் தனது படைப்புகளில் கற்பனைக்கு முதன்மை தராமல், சமூக யதார்த்தத்தையே அடிப்படையாகக் கொண்டார். இதனால் அவரது எழுத்துகள் வாசகனின் மனதை நேரடியாகத் தொடுகின்றன. அவரது எழுத்தாளுமையை அவரது படைப்புகளின் வழியாக ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ராஜம் கிருஷ்ணன் - வாழ்க்கையும் இலக்கியப் பாதையும்

ராஜம் கிருஷ்ணன் தனது வாழ்க்கை அனுபவங்களையும், அவர் வாழ்ந்த காலச் சூழலையும் தனது படைப்புகளில் நேர்மையாகப் பதிவு செய்தார். சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள், பெண்களின் அடக்குமுறை, தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம், கிராமிய மக்களின் வலி ஆகியவை அவரது எழுத்தின் மையமாக அமைந்தன. அவர் எழுதிய நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் அனைத்தும் வாழ்க்கையோடு நெருக்கமாக இணைந்தவை. கற்பனைக்கு மேலாக, உண்மையின் கசப்பு அவரது எழுத்துகளில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

## சமூக யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்ட எழுத்தாளுமை

சமூக உணர்வு கொண்ட எழுத்தாளர் - அவரது ஆளுமையின் முதன்மை அம்சம் ராஜம் கிருஷ்ணனின் ஆளுமையை உருவாக்கிய மிக முக்கியமான பண்பு சமூக அக்கறை ஆகும். அவர்

தனது படைப்புகளில் சமூக அநீதிகளை நேரடியாக சுட்டிக்காட்டுகிறார். "கரிப்பு மண், "சூழல்" போன்ற படைப்புகளில் நிலம், தொழில், அதிகாரம் ஆகியவற்றால் பாதிக்கப்படும் ஏழை மக்களின் நிலை உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைக்கப்படுகிறது. அவர் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை அலங்காரமின்றி வர்ணிப்பதன் மூலம், வாசகனைச் சிந்திக்க வைக்கிறார். இது அவரது துணிச்சலான, உண்மையைப் பேச அஞ்சாத ஆளுமையை வெளிப்படுத்துகிறது. ராஜம் கிருஷ்ணனின் எழுத்தின் முதன்மை தன்மை யதார்த்தம். அவர் சமூகத்தை அலங்கரிக்கவில்லை. மறைக்கவும் இல்லை. "வேருக்கு நீர்" என்ற படைப்பில் விவசாயிகளின் வாழ்க்கைச் சிக்கல்கள், உழைப்பின் மதிப்பு, அவர்களுக்கு கிடைக்காத அங்கீகாரம் ஆகியவை தெளிவாக வெளிப்படுகின்றன. சமூக வளர்ச்சியின் அடித்தளமாக இருக்கும் உழைப்பாளிகள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை அவர் ஆழமாக எடுத்துரைக்கிறார். நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் போன்ற மாற்றங்கள் உழைப்பாளி மக்களின் வாழ்க்கையை எவ்வாறு சிதைக்கின்றன என்பதும் அவரது படைப்புகளில் காணப்படுகிறது.

## பெண்ணிய எழுத்தாளுமை

ராஜம் கிருஷ்ணனை பெண்ணிய எழுத்தாளராக அடையாளப்படுத்துவது அவரது படைப்புகளின் முக்கிய சிறப்பாகும்.'பெண்குரல், 'ஒரு பெண்ணின் கதை' போன்ற படைப்புகளில் பெண்களின் வாழ்க்கை வெறும் துயரக் கதையாக அல்ல போராட்டக் கதையாக வெளிப்படுகிறது. பெண் குடும்பத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் நிலை, திருமணத்திற்குப் பின் சுய அடையாளத்தை இழக்கும் சூழல், ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண் எதிர்கொள்ளும் மௌன வன்முறை போன்றவற்றை நேர்மையாகப் பதிவு செய்கிறார் ராஜம் கிருஷ்ணன் அவர்கள். பெண் கதாபாத்திரங்கள் பலவீனமானவர்கள் அல்ல அவர்கள் சிந்திக்கிறார்கள், கேள்வி கேட்கிறார்கள், தங்கள் உரிமையை உணர்கிறார்கள். இதன் மூலம் பெண்கள் சுயநிலையுடன் வாழ வேண்டும் என்ற கருத்தை ராஜம் கிருஷ்ணன் வலியுறுத்துகிறார்.

## பெண் - உளவியல் சித்தரிப்பு

ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமையின் இன்னொரு முக்கிய அம்சம் பெண் உளவியல். பெண்களின் வெளிப்படையான துன்பங்களை மட்டும் அவர் எழுதவில்லை அவர்களின் உள்ளார்ந்த மனப்போராட்டங்கள், பயங்கள், ஆசைகள், கனவுகள் ஆகியவற்றையும் நுட்பமாகச் சித்தரிக்கிறார். 'ஒரு பெண்ணின் கதை' என்ற படைப்பில், பெண் தன் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கத் தொடங்கும் தருணங்கள், தன் அடக்குமுறைகளை உணரும் நிலை, அதிலிருந்து விடுபட முயலும் மனப்போராட்டம் என அனைத்தும் உளவியல் நுட்பத்துடன் எழுதப்பட்டுள்ளன. அக்கருத்துக்கள்அனைத்தும் வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

## உழைப்பாளி வர்க்கத்தின் வாழ்க்கைச் சித்தரிப்பு

ராஜம் கிருஷ்ணனின் படைப்புகளில் உழைப்பாளி மக்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். 'வேருக்கு நீர்' என்ற தலைப்பே உழைப்பாளிகளே சமூகத்தின் வேர்கள் என்பதை உணர்த்துகிறது. விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், ஏழை மக்கள் - இவர்களின் உழைப்பு சமூக வளர்ச்சிக்கு அடிப்படை என்றாலும், அவர்களுக்கு கிடைக்கும் வாழ்க்கை பாதுகாப்பு மிகக் குறைவானது. இந்த அநீதியை அவர் உணர்ச்சிப் பூர்வமாக இன்றி, யதார்த்தமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கிறார்.

## மனிதநேயப் பார்வை

ராஜம் கிருஷ்ணனின் எழுத்துகளில் காணப்படும் மற்றொரு முக்கிய தன்மை மனிதநேயம். தவறு செய்யும் மனிதர்களையும் அவர் வெறுப்புடன் சித்தரிப்பதில்லை. அவரது பல கதைகளில், குற்றவாளியாகத் தோன்றும் மனிதர்களின் பின்னணி, வறுமை, அறியாமை, சமூக அழுத்தம் போன்றவை விளக்கப்படுகின்றன. இதன் மூலம் "மனிதனை தவறுக்கு இட்டுச் செல்லும் சூழலே முக்கிய காரணம்" என்ற கருத்தை அவர் முன்வைக்கிறார். இதனால் வாசகர்களின் மனதில் கருணையும் புரிதலும் வளர்கின்றன.

## மொழிநடை மற்றும் எழுத்துப் பாணி

ராஜம் கிருஷ்ணனின் மொழிநடை மிக எளிமையானது. அலங்காரச் சொற்கள், கடினமான மொழி இல்லாமல் எழுதக்கூடியவர். பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதுகிறார். கிராமிய வாழ்க்கை சித்தரிப்புகளில், வழக்குச் சொற்கள், இயல்பான உரையாடல்கள் கதைகளுக்கு

உயிர் ஊட்டுகின்றன. இதனால் அவரது படைப்புகள், படித்தவர்களுக்கும் பாமர மக்களுக்கும் ஒரே அளவு புரியும் வகையில் அமைந்துள்ளன.

## சிறுகதைகளில் சமூக சிந்தனை

ராஜம் கிருஷ்ணன் சிறுகதை இலக்கியத்திலும் சிறந்து விளங்கினார். ஒரு சிறிய சம்பவத்தின் மூலம் ஒரு பெரிய சமூக உண்மையைச் சொல்வதில் அவர் வல்லவர். வறுமை, பெண் அடக்குமுறை, மனித உறவுகளின் சிக்கல் போன்றவை சிறுகதைகளில் மிகக் குறுகிய பரப்பிலேயே ஆழமாக வெளிப்படுகின்றன. இதனால் சிறுகதைகள் அவரது சமூக சிந்தனையின் சுருக்க வடிவங்களாக விளங்குகின்றன.

## சமூக மாற்றத்திற்கான இலக்கியம்

ராஜம் கிருஷ்ணனின் எழுத்துகள் வாசகனைச் சிந்திக்க வைப்பதோடு நிற்கவில்லை மாற்றம் தேடவும் தூண்டுகின்றன என்றே குறிப்பிடலாம். பெண்கள் கல்வி பெற வேண்டும், சுயநிலையுடன் வாழ வேண்டும், மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் என்ற கருத்துகள் அவரது படைப்புகளில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றன.

## காலத்தை கடந்த எழுத்தாளுமை

ராஜம் கிருஷ்ணின் படைப்புகள் அவர் வாழ்ந்த காலத்துக்குள் மட்டுமே பொருந்துபவை அல்ல. இன்றைய சமூகத்திலும் பெண்கள், உழைப்பாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்வதால், அவரது எழுத்துகள் காலத்தை கடந்தவை ஆக விளங்குகின்றன என்பதற்கு இன்றளவும் அவர் படைப்புகளுக்கு வாசகர்கள் முக்கியத்துவம் தருவதைக் கொண்டு உணர்ந்து கொள்ளலாம்.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணன் தமிழ் இலக்கியத்தில் ஒரு எழுத்தாளராக மட்டுமல்ல, ஒரு காலத்தின் சமூக மனசாட்சியாக விளங்குகிறார். அவரது படைப்புகள் அவரது ஆளுமையின் பிரதிபலிப்பே. பெண்களின் விடுதலை, சமூக நீதி, மனித மரியாதை, உண்மை ஆகியவற்றை இலக்கியத்தின் வழியாக வலியுறுத்தியவர் அவர். இன்றைய காலத்திலும் அவரது எழுத்துகள் பொருத்தமானவையாக இருப்பதற்குக் காரணம், அவர் எழுதியது காலத்திற்காக அல்ல மனிதத்திற்காக. அதனால் ராஜம் கிருஷ்ணனின் ஆளுமை தமிழ் இலக்கியத்தில் என்றும் நிலைத்திருக்கும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது. ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை என்பது சமூக யதார்த்தம், பெண்ணியச் சிந்தனை, மனிதநேயப் பார்வை, எளிமையான மொழிநடை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாகும். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல சமூக மாற்றத்திற்கான குரலாகவும் விளங்குகிறார். தமிழ் இலக்கியத்தில் அவரது பங்களிப்பு என்றும் நிலைத்த மதிப்புடையதாக இருக்கும்.

## References

அரங்க மல்லிகா, பெண்ணிய சிந்தனைகள், நியூ சென்சூரி புக் ஹவுஸ், சென்னை.

ராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர், சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License